முழுப் பதிப்புரிமையுடையது

## இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## AA2 பரீட்சை – 2017 சனவரி

# (AA25) வியாபாரச் சட்டமும் ஒழுக்கநெறியும்

(Business Law and Ethics)

2017 – 01 - 21
பிற்பகல்
[1.45 – 5.00]

பக்கங்கள் : 07
வினாக்கள் : 10

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (கவனமாக வாசிக்கவும்):**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடம்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.***

(3) ***விடைகள்*** *யாவும் தரப்பட்ட* ***விடைப் புத்தகத்தில்*** *பரீட்சைக்கு விண்ணப்பித்த* ***ஒரு மொழியில்*** *மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.*

(4) *நீங்கள் ஏதாவது எடுகோள்களை எடுத்திருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடுக.*

(5) ***வரைவிலக்கணங்களுடன்கூடிய செயல் வினைச்சொல் பட்டியல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிலும் ஒரு* ***வினைச் சொல்*** *உள்ளடங்கியிருக்கிறது (OTQ's தவிர்ந்த). பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் பட்டியலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(6) *100 புள்ளிகள்*

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

பத்து (10) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

*இல. **1.1** முதல் **1.7** வரையுள்ள வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்க. தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை அவ்வினாவுக்குரிய இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.1** பின்வருவனவற்றுள் அரசியலமைப்புக்கிணங்க சட்டம் இயற்றும் அதிகாரத்தைக் (Power to enact law) கொண்டிருப்பது எது?

(1) நீதவான் நீதிமன்றம் (2) உச்ச நீதிமன்றம்

(3) மாகாண சபை (4) பாராளுமன்றம்

**1.2** பின்வருவனவற்றுள் இலங்கையின் வடபகுதியிலுள்ள யாழ் குடாநாட்டில் வசிக்கின்ற தமிழ்க் குடிகளுக்கு ஏற்புடையதான சட்டம் எது?

(1) ஆங்கிலச் சட்டம் (2) கண்டியச் சட்டம்

(3) தேசவழமைச் சட்டம் (4) முஸ்லிம் சட்டம்

**1.3** பின்வருவனவற்றுள் இலங்கையிலுள்ள பிணைகள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ஒரு தொழிற்பாடாக **அமையாதது** எது?

(1) பிணைகள் சந்தையின் (securities market) அபிவிருத்தி தொடர்பாக அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கல்

(2) உரிமமளிக்கப்பட்ட பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் பிணைகளின் பட்டியற்படுத்தலையும் வழங்கலையும் ஒழுங்குமுறைப்படுத்தல்

(3) பட்டியற்படுத்துவதற்காகச் செய்யப்பட்ட ஏதாவது விண்ணப்பத்தை நிராகரிப்பதற்கு உரிமம் அளிக்கப்பட்ட பங்குப் பரிவர்த்தனையை வழிநடத்தல்

(4) செயற்றிட்ட முன்மொழிவுகள் பற்றி முதலீட்டாளர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடல்

**1.4** பின்வருவனவற்றுள் ஒப்பந்தமொன்றை முடிவுறுத்தும் முறை எது?

(1) செயலாற்றுகையினால் (By performance)
(2) நிலைகுலைவினால் (By frustration)
(3) மீறுகையினால் (By breach)
(4) மேலுள்ள அனைத்தும்.

**1.5** பின்வருவனவற்றுள் பொருட்கள் விற்பனை ஒப்பந்தமொன்றில் வாங்குவோனுக்குக் (கொள்வனவாளருக்குக்) கிடைக்கத்தக்க ஒரு நிவாரணம் (remedy) எது?

(1) பற்றுரிமை (Lien)
(2) மீள்விற்பனை (Resale)
(3) இடைவழியில் நிறுத்தல் (Stoppage in transit)
(4) குறித்த செயலாற்றுகைக்கான நடவடிக்கை

**1.6** பின்வருவனவற்றுள் பொருட்கள் விற்பனை ஒப்பந்தமொன்றின் அத்தியாவசியக் கூறாக **அமையாதது** எது?

(1) ஆதன மாற்றம்
(2) பொருட்கள்
(3) இடம்
(4) விலை

**1.7** பொருட்களின் வருகையின்மீது அப்பொருட்களுக்கான உரிமைக்கோரிக்கையைச் (claim) செய்வதற்கு இறக்குமதியாளர் (வாங்குபவர்) ஒருவருக்குத் தேவைப்படும் ஆவணம் பின்வருவனவற்றுள் எது?

(1) கப்பலேற்று வார்நாமம் (Bill of Lading)
(2) நாணயக் கடிதம் (Letter of Credit)
(3) மூல நாட்டுச் சான்றிதழ் (Certificate of Origin)
(4) மாற்றுண்டியல் (Bill of Exchange)

*இல. **1.8** முதல் **1.10** வரையான வினாக்களுக்கான சுருக்க விடைகளை வினா இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.8** 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் ஏற்பிசைவு செய்யப்பட்ட (recognized) புலமைச் சொத்துக்களின் (intellectual property) வகைகள் இரண்டினைக் (02) **கூறுக.**

**1.9** இலங்கையில் செயற்படுகின்ற குத்தகை (lease) வகைகள் இரண்டினைக் (02) **கூறுக.**

**1.10** 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடை மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டத்தின் (Shop and Office Employees' Act) கீழ் ஊழியர்களுக்கு உரித்தான விடுமுறைகள் (Holidays) மற்றும் விடுப்புகளின் (Leaves) வகைகள் இரண்டினைக் (02) **கூறுக.**

(ஒவ்வொன்றிற்கும ; 02 புள்ளிகள் வீதம், மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# <u>பகுதி B</u>

ஐந்து (05) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 02

**சுனிமல்** என்பவர் 2005 ஆம் ஆண்டு முதல் பாகிஸ்தானிலிருந்து சீனியை இறக்குமதி செய்து அதனை கொழும்பு நகரிலுள்ள மொத்த வியாபாரிகளுக்கு விற்பனை செய்கிறார். இலங்கைக்குப் பொருட்கள் அனுப்பப்படுவதற்கு முன் **சுனிமல்,** பாகிஸ்தான் வழங்குநர்களுக்கு முற்பணக் கொடுப்பனவை மேற்கொள்கிறார். தற்போது அவர் கொடுப்பனவு முறையினை நாணயக் கடித முறைமைக்கு (Letter of credit method) மாற்ற விரும்புகிறார்.

நாணயக் கடித முறைமையை எவ்வாறு இயக்குவது என்பது பற்றி **சுனிமலுக்கு விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 03

''கைமாறத்தகாதது'' என குறுக்குக் கோடிடப்பட்டிருந்த **B** என்பவருடைய ஒரு காசோலையை **A** என்பவர் திருடி, அதனை அவர் **D** என்பவருக்குச் செலுதத்வேண்டிய தொகையைத் தீர்ப்பனவு செய்வதற்காக **D** இற்கு வழங்கியிருந்தார். **D** என்பவர் அது திருடப்பட்ட காசோலை என்பதை அறியாது காசோலையை ஏற்றுக்கொண்டதுடன் அதனை அவர் தனது வங்கியிலும் சமர்ப்பித்திருந்தார்.

இக்காசோலையின் மீது பணத்தொகையைக் கோருவதற்கு (claim) **D** இற்கு உரித்துள்ளதா என்பதை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 04

தகவல் தொழினுட்பவியலின் அபிவிருத்தியானது சமூகத்தில் பல மேம்பாடுகளுக்கு முன்னோடியாகத் திகழ்ந்துள்ளது. மேலும், அது சமூகத்தில் பல ஒழுங்கீனங்களுக்கும்கூட முன்னோடியாக இருக்கிறது. கணினிவழிக் குற்றங்களிலிருந்து பாதுகாப்புப் பெறும்பொருட்டு இலங்கையில் நிலவுகின்ற நியதிச் சட்டங்களில் 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க கணினிவழிக் குற்றங்கள் சட்டமும் ஒன்றாகும்.

(a) 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க கணினிவழிக் குற்றங்கள் சட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள குற்றச்செயல்கள் மூன்றினைக் (03) **கூறுக.** (03 புள்ளிகள்)

(b) தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல் தொடர்பாக இலங்கையில் நிலவுகின்ற வேறு நியதிச் சட்டங்கள் இரண்டினைக் (02) **கூறுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 05

**டிலான்** என்பவர் பல்தேசியக் கம்பனியொன்றில் சேர்ந்துகொள்வதற்காக 2016 டிசெம்பர் 31 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் **PLN அசோசியேட்ஸ்** இல் தான் வகித்த கணக்காளர் பதவியினை இராஜினாமா செய்திருந்தார் (பதவி விலகியிருந்தார்). பதவி விலகல் திகதியில் அவர் **PLN அசோசியேட்ஸ்** இல் 10 வருட சேவையினை நிறைவுசெய்திருக்கிறார். 2016 டிசெம்பர் மாதத்திற்கான அவருடைய சம்பளம் ரூ. 120,000/- ஆகும்.

(a) பதவி விலகலின்போது பணிக்கொடையைப் (gratuity) பெறத் தகுதி பெறுவதற்காக, ஊழியர் ஒருவரால் நிறைவேற்றப்பட்டிருக்கவேண்டிய கட்டளை விதிகள் (criteria) இரண்டினைக் (02) **கூறுக.** (02 புள்ளிகள்)

(b) **டிலானுக்கு** பணிக்கொடை பெறுவதற்குத் தகுதியுள்ளது எனக் கருதி அவருக்குச் செலுத்தப்பட வேண்டிய பணிக்கொடைத் தொகையினைக் **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 06

உள்ளக நாட்டதாரர்களினதும் (அக்கறையுள்ள தரப்பினர்) அதேபோன்று வெளிவாரி நாட்டதாரர்களினதும் நலனின்பால் செயலாற்றுவது தொழில்சார் கணக்காளர் ஒருவரின் பொறுப்பாகும். பொது விடயங்களைக் கையாளும்போது கணக்காளர் ஒருவர் கடைப்பிடிக்க வேண்டிய தொழில்சார் ஒழுக்க நெறிகளின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்று சுயாதீனம் ஆகும்.

தொழில்சார் ஒழுக்க நெறிகளின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்றான ‘‘சுயாதீனம் (independence)’’ என்பதாற் கருதப்படுவது யாதெனு **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

பகுதி *B* முடிவு

---

# <u>பகுதி C</u>

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 07

(a) 2016 சனவரி 01 இல் **சப்பரமாது** என்பவர் **XYZ காப்புறுதிக் கம்பனி**யிடமிருந்து தனது வீட்டிற்கு ரூ. 3 மில்லியன் பெறுமதியான தீ அபாயக் காப்புறுதியினை பெற்றுக்கொண்டார். காப்புறுதியினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர், 2016 மார்ச் 01 இல் **சப்பரமாது** தனது வீட்டினை 3 மில்லியன் ரூபாவுக்கு **பெரேரா** என்பவருக்கு விற்பனை செய்தார். 2016 மார்ச் 15 ஆந் திகதி, வீடு தீயினால் அழிவடைந்த அதேநேரம் 2016 மார்ச் 20 ஆந் திகதி **XYZ காப்புறுதிக் கம்பனி,** காப்பீட்டுக் கொள்கையின் கீழ் 3 மில்லியன் ரூபாயினை வழங்குவதற்கு இணங்கியிருந்தது. 2016 மார்ச் 30 இல் வீடு விற்பனையிலிருந்தான விற்பனைத் தொகை ரூ. 3 மில்லியனை **பெரேரா**விடமிருந்து **சப்பரமாது** பெற்றுக்கொண்டார்.

காப்புறுதிக் கொள்கையின் கீழ் **XYZ காப்புறுதிக் கம்பனி**யிடமிருந்து இழப்பீட்டைப் பெற்றுக் கொள்வதற்கு **சப்பரமாது** உரித்துடையவரா என்பதை **ஆராய்க.** (06 புள்ளிகள்)

(b) காசோலையொன்று பொதுவாக மாற்றத்தகு சாதனமொன்றாகப் (negotiable instrument) பயன்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு காசோலையும் ஒரு மாற்றுண்டியலாக (bill of exchange) இருக்கின்றதாயினும் ஒவ்வொரு மாற்றுண்டியலும் ஒரு காசோலையாக இருப்பதில்லை.

காசோலை ஒன்றின் பண்பியல்புகள் (characteristics) நான்கினைக் (04) **கூறுக**. (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 08

**அமிந்தா** என்பவர் 15 வருடங்களுக்கும் மேலாக வியாபாரத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் ஒரு தனியுடமை உரிமையாளர் ஆவார். தற்போது, **அமிந்தா** தனது வியாபாரத்தை பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி (Private limited liability company) ஒன்றாக மாற்றுவதற்குத் திட்டமிட்டுள்ளார்.

(a) தனது வியாபாரத்தை பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்றாக மாற்றுவதற்கு **அமிந்தா** திருப்திசெய்ய வேண்டிய தேவைப்பாடுகள் குறித்து அவருக்கு **விபரிக்குக**. (04 புள்ளிகள்)

(b) பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்றின் சிறப்பியல்புகள் (features) மூன்றினை (03) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 09

**குமாரின்** முகவராக **ரோஸ்** தொழிற்படுகிறார். **ரோஸ்** முகவர் என்ற ரீதியில் பல ஆண்டுகளுக்கும் மேலாக **சில்வா**வுடன் **குமார்** சார்பாக பல ஒப்பந்தங்களில் நுழைந்துள்ளார். **குமார்** சார்பாக **ரோஸ்** நுழையும் எந்தவொரு ஒப்பந்தத்தினது நட்டம் தொடர்பாகவும் **குமாரினால்** நட்டஈடு வழங்கப்படுகிறது. பின்னர் **குமார், ரோஸ்** இன் முகவராண்மையை (முகவராகத் தொழிற்படுவதை) முடிவுறுத்தியிருந்த (terminated) போதிலும் அது பற்றி **சில்வா**வுக்குத் தெரியப்படுத்தியிருக்கவில்லை. **ரோஸ், குமார்** சார்பாக **சில்வா**வுடன் தொடர்ந்தும் ஒப்பந்தங்களில் நுழைகிறார். **ரோஸ்** இன் முகவராண்மை முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் **ரோஸுடன் சில்வா** உள்நுழைந்திருந்த ஒப்பந்தம் ஒன்றிலிருந்து குறிப்பிடத்தக்கதொரு நட்டத்திற்கு **சில்வா** ஆளாகிறார். மேலுள்ள ஒப்பந்தம் காரணமாக **சில்வா** தான் அடைந்த நட்டத்திற்காக **குமாரிடமிருந்து** நட்டஈட்டைக் கோருகிறார்.

(a) முகவராண்மைச் சட்டத்தின் (Law of agency) கீழ் **குமாரிடமிருந்து** இழப்பீட்டைக் கோருவதற்கு **சில்வா** உரித்துடையவரா (entitled) என்பது பற்றி **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) முகவர் ஒருவரின் கடமைகள் (duties) நான்கினைக் (04) **கூறுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

பகுதி *C* முடிவு

## <u>பகுதி D</u>

ஒரு கட்டாய வினா

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 10

(a) **A** என்பவர் தனது காரை **B** என்பவருக்கு விற்பனை செய்வதற்காக தபால் மூலமாக ஒரு கடிதத்தில் விருப்பறிவிப்பு (offered) செய்திருந்தார். இக்கடிதம் 2016 சனவரி 02 ஆந் திகதி தபாலிடப்பட்டிருந்தது. தபாலில் காணப்பட்ட தாமதம் காரணமாக அக்கடிதம் 2016 சனவரி 10 ஆந் திகதியே **B** யிடம் சென்றடைந்தது. **B** அக்காரை வாங்குவதற்கு இசைவு தெரிவிக்கின்ற (acceptance) தனது கடிதத்தை 2016 சனவரி 13 ஆந் திகதி தபாலில் இட்டிருந்தபோதிலும் அக்கடிதம் தவறான திசையொன்றில் (wrong direction) இருந்த வெளித்தோற்றத்தில் அதேபோன்றதொரு விலாசத்திற்குக் கையளிக்கப்பட்டது.

அக்கடிதத்தைப் பெற்றவர் அதனை 2016 சனவரி 20 ஆந் திகதி அருகிலிருந்த தபால் நிலையத்தில் ஒப்படைத்திருந்தார். அதனைத் தபால் திணைக்களம் மீண்டும் சரியான பெறுநரிடம் (அதாவது **A** யிடம்) 2016 சனவரி 30 ஆந் திகதி ஒப்படைத்திருந்தது. இதேவேளை, **B** யினுடைய இசைவு தொடர்பில் நியாயமானதொரு கால எல்லையினுள் **B** யிடமிருந்து கேட்பனவு (hear) இல்லை என்பதால் 2016 சனவரி 15 ஆந் திகதி **A** என்பவர் விருப்பறிவிப்பைத் திரும்பப்பெறும் தனது கடிதத்தை **B** யிற்கு அனுப்பியிருந்தார். அத்துடன் தனது காரை 2016 சனவரி 16 ஆந் திகதி **C** என்பவருக்கு விற்பனை செய்திருந்தார். எவ்வாறாயினும், விருப்பறிவிப்பைத் திரும்பப்பெறும் இக்கடிதம் 2016 சனவரி 18 ஆந் திகதி **B** யிடம் சென்றடைந்தது. காரை வாங்குவதுடன் தொடர்புடைய விருப்பறிவிப்பை அவர் ஏற்றுக்கொண்டார் என்ற கருத்து இருப்பதால் **B** அதனை வாங்குவதற்கு எதிர்பார்த்திருந்தார்.

இவ்விடயம் தொடர்பில் **B** யிற்குள்ள சட்ட உரிமை (Legal right) பற்றிக் **கலந்துரையாடுக**.

(12 புள்ளிகள்)

(b) **நிமாலின்** பண்டசாலையில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள ஒரு தொகை கணினிகளிலிருந்து 100 கணினிகளை விற்பனை செய்வதற்கான **கமலுடனான** ஒப்பந்தம் ஒன்றினுள் 2016 மார்ச் 01 இல் **நிமால்** நுழைந்திருந்தார். ஒப்பந்தத்தில் நுழைந்த நேரத்தில் பண்டசாலையில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள மீதிக் கணினிகளிலிருந்து 100 கணினிகளை வேறுபடுத்தக்கூடாது என்பதில் இணக்கம் காணப்பட்டிருந்தது. கணினிகளின் ஒட்டுமொத்த செருகிகளும் (slots) 2016 பெப்ரவரி 20 இல் **நிமாலினால்** இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. **கமலுக்கு** உடமையை மாற்றுகின்ற காலம் தொடர்பில் ஒப்பந்தத்தில் எவ்வித நிபந்தனையும் உள்ளடக்கப்படவில்லை. எவ்வாறாயினும், ஒப்பந்தத்தில் நுழைந்ததன் பின்னர், **கமால் நிமாலைத்** தொடர்புகொண்டு, தனது 100 கணினிகளையும் வேறாக்கிக் களஞ்சியப்படுத்துவதற்கு அறிவுறுத்தியிருந்தார். **கமலின்** அறிவுறுத்தலின்படி **நிமாலும்** அந்தக் கணினிகளை வேறுபடுத்திக் களஞ்சியப்படுத்தியிருந்தார். எவ்வாறாயினும், 100 கணினிகள் உட்பட பண்டசாலை முழுவதும் 2016 மார்ச் 02 இல் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் அழிவடைந்தது. **நிமால்** வெள்ளப்பெருக்குச் சேதங்களுக்கு எதிராக எவ்வித காப்புறுதியையும் கொண்டிருக்கவில்லை. 100 கணினிகளின் நட்டத்தை **கமல்** சுமக்க வேண்டுமென்று (bear the loss) **நிமால்** வாதாடுகிறார்.

**கமல்** 100 கணினிகளினதும் நட்டத்தினைச் சுமக்க வேண்டுமா என்பது பற்றி **ஆராய்க.**

(13 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

பகுதி *D* முடிவு

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |